**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

S.C. No. 38 of 2025

Deposition of P.W.19

Name of the Witness: திரு.சுப்பிரமணியம்

Date :16.06.2026

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்படுகிறார்.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக விசாரணை செய்யப்படுகிறார்.**

13.05.2024ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் ஜீவாணந்தம் அவர்கள் இவ்வழக்கில் கண்ட 3ம் எதிரி ரவி பயன்படுத்திய ஓபோ A795G cell no 8148892114 என்ற செல்போனை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் ராகுல்கண்ணன் மற்றும் சம்பத் ஆகியோர் முன்னிலையில் 13.,30 மணிக்கு மகஜரில் கைப்பற்றினார். அதை நீதிமன்றத்தில் படிவம் 91ஆஜர் படுத்தினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.42** ஆகும். அந்த செல்போன் **அ.சா.பொ.8** ஆகும். மேலும் 1ம் எதிரியை நான் கைது செய்து விசாரித்த போது அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் தன்னை அழைத்து சென்றால் தான் அ.சா.1ஐ வெட்டுவதற்கு பயன்படுத்திய கத்தியை மறைத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து ஆஜர் செய்கிறேன் என்றும், கோவிந்தனை கொலை செய்ய திட்டம் போட்டு வாகனத்தை மோத விட்டு கொலை செய்ய முயற்சி செய்த இடத்தையும் அடையாளம் காட்டுவேன் என கூறினார். அதன் அடிப்படையில் அவரை அழைத்து சென்று அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர்படுத்தி, வாகனத்தை மோதவிட்டு கொலை செய்ய முயன்ற இடத்தையும் அடையாளம் காட்டினார். அதனை அ.சா.ஆ.39 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியும், கொலை செய்ய

முயற்சித்த இடத்தையும் அடையாளம் கண்டேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.43** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

14.05.2024ல் பாலக்கோடு நீதிமன்றத்தில் ரிமாண்ட் ஆடரில் உத்திரவை தெரிந்து கொண்டதற்காக 1ம் எதிரி இட்ட கையொப்பமும், 14.05.2024ல் 1ம் எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படுவதாக உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஆவணங்கள் அனைத்தும் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் கைப்பற்றப்படவில்லை என்றும், அவற்றிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1, 3, 5 எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் யாவும் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும், அவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும், ஆஜா எதிரிகளுக்கும எந்த சம்பந்தமும் இல்லை என்றும், ஆஜா் எதிரிகள் நிரபாதிகள் என்று சொன்னால் சரியல்ல.

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.